2026 ஆகஸ்ட் மாதம் 20– ஆம் தேதி வியாழக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 4/2025

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.T.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW8 (LW10) – Dr.விக்னேஸ்வரன் |
| தகப்பனார் பெயர்: | இளங்கோவன் |
| ஊர்: | தேனி |
| வட்டம்: | தேனி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | உதவி பேராசிரியர், தேனி அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை |
| வயது : | 35 |

20.08.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 26.02.2024ம் தேதி சின்னமனூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியிலிருந்தபோது, மொக்கப்பாண்டி (வயது 62) த/பெ.மாயாண்டி, தெற்குத் தெரு, சின்ன ஓவுலாபுரம் என்பவர் மார்பு பகுதி மற்றும் வயிற்றில் குத்துக்காயத்துடன் சிகிச்சைக்காக 108 ஆம்புலன்ஸ் மூலம் அவரது மனைவி

சரஸ்வதி அழைத்து வந்தார். அவரிடம் விசாரித்தப்போது, 26.02.2024ம் தேதி இரவு 07.00 மணியளவில் தனது வீட்டின் முன்பு வைத்து அடையாளம் தெரிந்த ஓர் ஆண் கத்தியால் குத்தி காயத்தை ஏற்படுத்திவிட்டதாக கூறினார்.

2. அந்த விபரத்தை விபத்து பதிவேட்டில் பதிவு செய்தும், காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேன். அவரை பரிசோதித்து பார்த்ததில், வயிற்றுப் பகுதியில் மூன்று இடங்களில் வெவ்வேறு பகுதிகளில் குத்துக்காயங்கள் இருந்தன. சிறுகுடல் பகுதி வெளியே இருந்தது, குத்துக்காயம் வலது மார்பின் பகுதியில் இருந்தது, இடது தோள்பட்டையில் 2 x 2 x 2 செ.மீ அளவிலான கிழிந்த காயங்கள் இருந்தன. பின்பு, மொக்கப்பாண்டிக்கு ஏற்பட்ட காயத்திற்கு முதல் சிகிச்சை செய்தும், மேல்சிகிச்சைக்காக தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

3. பின்பு தேனி, அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையிலிருந்து மருத்துவர் திரு.வெங்கடேஷ் சுந்தர் அவர்களின் அறிக்கையை பெற்று பார்வையிட்டதில் மொக்கப்பாண்டி, MIC No.1065, I.P.No.10293–ன்படி சிகிச்சை பெற்றும், 11.03.2024ம் தேதி விடுவிப்பு செய்யப்பட்ட விபரமும், அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் எனவும் தெரியவந்தது. அதனடிப்படையில் மொக்கப்பாண்டிக்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை குறித்து, கொடுங்காயம் என காயச்சான்று வழங்கினேன். நான் அளித்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் முறையே **அ.சா.ஆ.6** மற்றும் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகின்றன. என்னிடம் காட்டப்படும் சா.பொ.ஆ.1 கத்தியால் குத்தினால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

4. நான் பதிவு செய்த விபத்து பதிவேடு அ.சா.ஆ.6–ல் காவல்துறைக்கு தகவல் கொடுக்கவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் தெரிந்த நபர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் நான் கையொப்பம் செய்துள்ள காலத்தில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், மேலே தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. காயச்சான்று அ.சா.ஆ.7–ல் கையொப்பத்திற்கு கீழ் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் சம்பவம் இரவு 7.00 மணிக்கு நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் 7.30 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் எந்த வாகனத்தில் மேல்சிகிச்சைக்கு அனுப்பினேன் என்று குறிப்பிடவில்லை என்றால் அது தேவையில்லை. அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் உடல்பகுதியின் முன்பகுதியில் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், பின்பகுதியில் காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கூர்மையான கத்தி என்று அ.சா.ஆ.6–ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் மொக்கப்பாண்டி மனைவி சரஸ்வதி 108 ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் மூன்று முறை விசாரித்தார்கள். எந்தெந்த தேதிகளில் விசாரித்தார்கள் என்றால் விபத்து பதிவேடு பதிவு செய்த நாளான 26.02.2024, காயச்சான்றிதழ் பெறும்போது 08.04.2024 ம் தேதி விசாரித்தார்கள். அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் வலதுபக்க மார்பில் காயங்கள் இருந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். காயச்சான்றிதழ், அ.சா.ஆ.6 விபத்து பதிவேடு ஆகியவற்றை போலீசாரிடம் எப்போது ஒப்படைத்தேன் என்றால் 26.02.2024 ம் தேதியாகும். அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் கைகளில் காயம் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இடது முட்டிக்கு மேல் காயங்கள் இருப்பதாக

சொல்லியுள்ளேன். அ.சா.ஆ.1 கத்தியால் காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு சொல்லியுள்ளேன் என்றாலும், இளநீர் சீவும் கூர்மையான அரிவாளாலும், கூர்மையான கம்பியாலும் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

7. மேல்சிகிச்சைக்கு அனுப்பிய பின் தேனி அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் வழங்கிய காயச்சான்றிதழை பார்த்து நான் காயச்சான்றிதழ் வழங்கினேன் என்றால் சரிதான். தேனி அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை வழங்கிய காயச்சான்றிதழை நான் காவல்நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. அ.சா.ஆ.6 விபத்து பதிவேட்டில் வீடு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், வீட்டிற்கு அருகில் என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னவாறு சொன்ன தேதியில் காயச்சான்றிதழ் மற்றும் விபத்து பதிவேடு வழங்கவில்லை என்றாலும், விபத்து பதிவேட்டில் கையொப்பம் செய்யாமலும், விபத்து பதிவேட்டில் கையொப்பம் மட்டும் செய்து தேதி குறிப்பிடாமல் கையொப்பம் செய்துள்ளேன் என்றாலும், காயச்சான்றிதழில் கையொப்பம் செய்து கீழே தேதி குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 20.08.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.20 02:33:41 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
20.08.2026